THE HON. THIRU K. ANBAZHAGAN : There are three aspects in this King Institute and one aspect is to produce freeze-dried small pox vaccine, bacterial vaccines such as Cholera, T. A. B., Autio, Curative, Anti-Sera such as Anti-Gas Ganerene, Anti-Tetanus, Anti-Diphtheric Serum, Toxoids, Blood Group Sera and Blood Plasma, Saline, etc. These things are not available in headquarters hospitals. Various bacteriological and pathological tests such as blood examination, urine test, Khan Test, Wassorman Test, V.D.R.I. Test, etc., are as far as possible not undertaken at the headquarters hospitals or in General Hospital.

DR. H. V. HANDE : As an alternative, will this Government at least examine this proposal, namely, to increase the facilities there, to expand this, so that at least some basic requirements like insulin and other things can be manufactured here? Will this Government examine this—they may not commit themselves by giving an answer—will the Government examine the possibiliiy of starting production of certain materials which are scarce in the market, so that directly the Government can get these materials, now that there are modern equipment and things have all advanced.

THE HON. THIRU K. ANBAZHAGAN : This is a highly technical question for which I need not answer now.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த ப்ளாட் ஸ்மெடியின் போன்றவற்றை ஃபாரன்ஸிக் லேபரட்டரிக்கு அனுப்புகிறீர்களே, அம்மாதிரியான லேபரட்டரி ஒன்றும் இந்த கிங் இன்ஸ்டிட்யூட்டிலே இன்ஸ்டால் செய்வதற்கு அரசாங்கத்திற்கு யோசனை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அங்கே அனுப்புவதெல்லாம் சில குற்றச்சாட்டுகள், குறைபாடுகள் அப்படிப்பட்ட நிலைமைகள் உள்ளவற்றை பரிசோதனைக்காக, ஆனால் இது பொதுவாக நோய் மருத்துவத்திற்காக.

காவல் துறையினருக்கு இலவச ரயில் அனுமதிச் சீட்டு.

* 178 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா-

காவல் துறையினருக்கு அவர்கள் வெளியூர்களுக்குச் சென்று வர இலவச ரயில் பாஸ் வழங்கக் கோரி தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு சிபார்சு செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ரயில்வே காவல் படையினர் தங்கள் சொந்த அலுவல்களைக் கவனிக்க வெளியூர் செல்வதற்காக அவர்களுக்குக் குடும்ப இலவச ரயில் அனுமதிச் சீட்டுகளை வழங்குமாறு பரிவுரை செய்து 1969 மார்ச்சு திங்களில் இந்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. எனினும் இச்சலுகையைத் தர இயலாமையைப் பற்றி இந்திய அரசு வருத்தத்துடன் தெரிவித்தது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ராணுவத் துறையினருக்கு ரயில்வே பாஸ் கொடுக்கப்படுகின்றது. அதுபோன்று எல்லாக் காவல் துறையினருக்கும் ரயில்வே பாஸ் கொடுக்குமாறு நம்முடைய அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ரயில்வே காவல் துறையினருக்கே நாம் செய்கின்ற பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பிறகு எல்லாக் காவல் துறையினருக்கும் எப்படிக் கொடுப்பார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : எம்.பி.க்களுக்கு ரயில்வே பாஸ் கொடுக்கப்படுவது மாதிரி எம்.எல்.ஏ.க்களுக்கும் முதல் வகுப்பு ரயில்வே பாஸ் வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா? மத்திய அரசு நடவடிக்கை எடுத்தால் அந்த அரசோடு நம்முடைய அரசும் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதுபற்றி இந்த மன்றத்திலே அடிக்கடி பிரச்னைகளை எழுப்பியுள்ளார்கள். இதுபற்றி யோசித்து, தமிழக அரசுப்பேருந்து வண்டிகளில் இலவசமாக உறுப்பினர்கள் செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) ரிப்பேராகி விடும் என்று சொல்கிறார்கள், ரயில்கூட தான் ரிப்பேர் ஆகிவிடுகிறது. ரயில்கூடத்தான் தாமதமாக வருகிறது. ஆகவே இப்படிப்பட்ட யோசனையை கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, காவல் துறையினர் அலுவல் காரணமாக ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதற்கு பாஸ் வாரண்ட் கொடுக்கப்படுகின்றது. ஆனால் வேறு துறையைச் சேர்ந்தவர்கள் அலுவல் காரணமாகச் செல்வதற்கு பாஸ் வாரண்ட் கொடுக்கப்படுவதில்லை. அரசாங்கம் இதை ஆராய்ந்து அலுவல் காரணமாகச் செல்கின்ற எல்லாத் துறையினருக்கும் பாஸ் வாரண்ட் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கேள்வி ரயில்வே காவல் துறையினரைப் பற்றியது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அக்கறை உள்ளவர் என்றால் தனிக்கேள்வி போட்டால் பதில் தயாரித்துத் தரலாம்.

காவல் துறை அலுவலர்களின் நிகராடை.

* 179 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகப் போலீசார் அணியும் குல்லாய், உடைகள் முதலியவற்றை மாற்றியமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1967-லிருந்து மாநிலக் காவல் துறை அலுவலர்களும் சார்நிலைக் காவல் துறை அலுவலர்களும் தலையணியாக 'பீக்' தொப்பிகளுக்குப் பதிலாக 'பெரட்' தொப்பிகளை அணிய அனுமதிக்கப்பட்டுள்ளனர். 1969லிருந்து இந்தியக் காவல்துறை அலுவலர்களும் "பெரட்" தொப்பிகள் அணிய அனுமதி அளிக்கப்பட்டுள்ளனர். காவல்துறை அலுவலர்களின் நிகராடையை மாற்றும் செயற்குறிப்பு எதுவும் முடியுறு நிலையில் இல்லை.